# சைதை துரைசாமியின்
# மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்

28, முதல் பிரதான சாலை, சி.ஐ.டி.நகர், சென்னை-600035.
போன்: 2435 8373, 98401 06162
Email: manidhanaeyam@gmail.com Website: www.saidais.com


19.02.2016

---

## "மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம்" நடத்திய முதன்மைத் தேர்வில் 83 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்றனர்.

## 20.02.2016 முதல் நேர்முகத் தேர்வு பயிற்சிக்கு பதிவு செய்யலாம்.

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு **"மனிதநேய அறக்கட்டளை"** தொடங்கப்பட்டு, மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமுதாயப் பணிகள் இந்த அறக்கட்டளையின் மூலமாக செய்யப்பட்டு வருகின்றது.

**"சைதை துரைசாமியின் மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்"** மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த பத்து ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II (DC, DSP, DRO, DEO, CTO), சிவில் நீதிபதி பதவிகளுக்கும், SUB-INSPECTOR, A.E(HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ, PWD (CIVIL,ELECTRICAL)) போன்ற பதவிகளுக்கும் இதுவரை **2665** க்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர்கள் வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட முதன்மைத் தேர்வில் எமது மனிதநேய பயிற்சி மையத்தைச் சேர்ந்த 83 மாணவ மாணவியர்கள் (28 மாணவிகள் / 55 மாணவர்கள்) தேர்ச்சி பெற்றுள்ளனர்.**

இந்த முதன்மைத் தேர்வில், தேர்ச்சி பெற்றுள்ள அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் நேர்முகத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகள் இலவசமாக தொடர்ந்து நடத்தப்படவுள்ளன. இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் தேர்ச்சி பெற்ற, அனைத்து மாணவ-மாணவியர்கள், தங்களுடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படம், எழுத்துத் தேர்விற்கான நுழைவுச்சீட்டு ஆகியவற்றுடன், **20.02.2016** எமது மையத்தில் நேரிலோ அல்லது இணையதளத்தின் ***(www.saidais.com)*** வாயிலாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

அவ்வாறு நேர்முகத் தேர்விற்கு பதிவு செய்துகொள்ளும் அனைவருக்கும், இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இந்த எழுத்துத் தேர்வுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும், அனைத்து வசதிகளும் இலவசமாக செய்து தரப்படும் என மையத்தின் பயிற்சி இயக்குநர் திரு.கார்த்திக்கேயன் அவர்கள் தெரிவித்துள்ளார்.